# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,878/4 — 1969 නොවැම්බර් 5 වැනි බදාදා — 1969.11.5

14,878/4 ம் இலக்கம்—1969 ம் ஆண்ம் நவெம்பர் மாதம் 5 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

### விலைக்கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. எப்சி–5–10–69–1 **உப உணவுப்பொருட்கள்**

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை**

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினுல் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அம்பாறை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) தந்திரி முதலிகே தொன் பிரான்சிஸ் றெருபட் ஆகிய நான் இக்கட்டளையால்.—

(1) 1968 ம் ஆண்டு ஜூலை மாதம் 19 ம் திகதி வெளியான 14,811–1 இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரமான 1968 ம் ஆண்டு ஜூலை மாதம் 14 ம் திகதியைக் கொண்ட உ. க.–5–10–68–2 இலக்கக்கட்டளையும், 1968 ம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ம் திகதி வெளியான 14,785–1 ம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரமான 1968 ம் ஆண்டு ஜனவரி 17 ம் திகதியைக் கொண்ட உ. க. 5–17–68 ம் இலக்கக்கட்டளையும் இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் மொத்த வியாபாரிகளின் உசச மொத்த விலையாக இப்போதைக்கென விதிக்கப்பட்ட விலையுடன் இதற்குள்ள அட்டவணையின் 3 ம் பந்தியில் குறிக்கப்பட்ட தொகை கூட்டப்பட்ட விலையே அட்டவணையின் 2 ம் பந்தியில் விஸ்தரிக்கப்பட்ட இடப்பரப்புக்களில் அல்லது நிர்வாக மாவட்டங்களில் 1 ம் பந்தியில் முறையே விபரிக்கப்பட்ட பொருட்களின் அதற்குக்கூடிய விலைக்கு விற்கலாகாத மொத்த அந்தரின் உடனேயே நடைமுறையாகும் மொத்த விலையாக விதிக்கிறேன்.

(3) (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர சஎல்லைக்குள் சில்லறை வியாபாரிகளின் உசச சில்லறை விலையாக இப்போதைக்கெனக் குறிப்பிடப்பட்ட விலையுடன் 4 ம் பந்தியில் குறிக்கப்பட்ட தொகையைக் கூடியவிலையே குறித்த அட்டவணையின் நேரொத்த 1 ம் பந்தியில் சொல்லப்பட்ட பொருட்களின் அட்டவணையின் 2 ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட இடப்பரப்பிலுள்ள அல்லது மாவட்ட எல்லைக்குள் அதற்குக் கூடிய விலைக்கு விற்கலாகாத நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக நடைமுறையில் வரும்படி விதிக்கிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக :—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருள் ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதற்குக் கூடிய தொகையில் விற்றல் மொத்த விற்பனையாகுமெனவும்,

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளின் மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்பதற்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விலையாகுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளுடன் கலந்து இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் எவராவது விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப் பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட ஒரு பொருளின் சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையையும் ஒரு அங்குலத்துக்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் எழுதி அப்பொருளும் ஆகக்கூடிய விலையும் வாங்குபவரால் நன்றாக பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்திற்காக “ இருத்தல் ” அல்லது “ இரு ” என்பது அவ்வோர்டுப்போயில் எடுத்தளவை முறையின் இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம், 2 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட பொருளெதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவது பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவன வற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆணையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி,

(ஆ) விற்ற பொருளின் தொகை, (நிறையில்)

(இ) விற்ற தொகைக்கு கொடுத்த தொகை

(ஈ) எவ்வித விற்பனை, அதாவது மொத்த விற்பனையா, அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 3 ம், 4 ம் பந்திகளில் குறிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளுள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆணையிடுகிறேன்.

1969 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு அம்பாறை மாவட்டக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ரி. டி. எப். ரெறுபட்,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
அம்பாறை மாவட்டம்.

**அட்டவணை**

| பந்தி 1<br>பொருளின் விபரம் | பந்தி 2<br>பரிபாலன மாவட்ட இடாப்பு | பந்தி 3<br>கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்குக் கூட்டவேண்டிய விலை | பந்தி 4<br>கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட சில்லறை வியாபாரிகளின் இருத்தல் ஒன்றுக்குக் கூட்டவேண்டிய விலை |
|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. |
| சிந்தாமணிக்கடலை — | 1. கரவாகுப்பற்று நிந்தவூர்ப்பற்று, சம்மாந் துறைப்பற்று* | 6 0 | 0 7 |
| தட்டப்பயறு (கௌபீஸ்) — | | | |
| பாசிப்பயறு — | | | |
| கொண்டைக்கடலை — | | | |
| முழு உழுந்து .. | 2. அக்கரைப்பற்று வேவகம்பற்றுப்பகுதி* | 6 20 | 0 7 |
| உழுத்தம்பருப்பு — | | | |
| கடலைப்பருப்பு — | | | |
| துவரம்பருப்பு — | | | |
| கொத்தமல்லி — | 3. பாணமைப்பற்றுப்பகுதி* | 6 50 | 0 7 |
| வெண்கயம் (சிறு) — | | | |
| வெண்காயம் (சிறு வெண்காயம் தவிர்ந்த ஏனைய எல்லா ரகமும்— | | | |

* இவ்வடையாளம் பிரிவுக்காரியாதிகாரியின் பகுதிகளைக் குறிக்கும்.

குறிப்பு.—இவ்விலைகள் பொருட்கள் விற்கப்பட வேண்டிய குறிப்பிட்ட விலைகளல்ல, இவை அவற்றிலும் பார்க்க கூடிய விலைக்கு விற்கலாகா உச்ச விலைகளாகும்.

11–38

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.